அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே

# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2024

### பேச்சு 2016 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவர்கள்.

## முயற்சி உயர்ச்சி தரும்

“முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்”

ஆம்! எந்த ஒரு செயலும் வெற்றி பெறவேண்டுமாயின் நாம் முயற்சி செய்தல் வேண்டும். வெற்றியின் நுழைவாயில் முயற்சி என்பர். இடைவிடாத முயற்சி அனைவருக்கும் வெற்றி கொடுக்கும்.

பறவைகளைப் பாருங்கள் அவை மேலும் மேலும் உயரப் பறக்க முயலுகின்றன. மயில் நன்கு ஆடவும் குயில் நன்கு கூவவும் முயற்சி செய்கின்றன. ஆம்! சிறுவர்களாகிய நாமும் சோம்பலாக இருக்காது, எந்நாளும் முயற்சிக்க வேண்டும். முயற்சி உயர்ச்சி தரும் என்பது உறுதி.

எமது இலட்சியத்தை – குறிக்கோளை அடைய வேண்டுமாயின், தொடர்ந்து சோர்வின்றி முயற்சிக்க வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் சோர்ந்து விடக்கூடாது! பயம் கொள்ளல் ஆகாது! தோல்வியே வெற்றியின் முதற்படி.

உலகில் விடாமுயற்சியின் மூலம் வெற்றி பெற்றவர்கள் பலரை நாம் அறிவோம். விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீரர்கள், கலைஞர்கள் விடாமுயற்சியின் மூலம் உன்னத நிலையை அடைகின்றனர். முயன்றால் வெற்றி நிச்சயம் என்பதை மனதிற் கொள்வோம்.

முடியும் வரை முயற்சி செய்யுங்கள்,

உங்களால் முடியும் வரை அல்ல

நீங்கள் நினைத்த செயல் முடியும் வரை!

நன்றி! வணக்கம்

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.

அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.

மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.